# இறைவனின் ஆவி

இறைவனின் ஆவிநிழலிடவே
இகமதில் அவர் புகழ்பகர்ந்திடவே
என்னை அழைத்தார் அன்பில் பணித்தார்
அவர் பணிதனை தொடர்ந்திடவே

**1**
வறியவர் செழிப்பினில் வாழ்ந்திடவும்
அடிமைகள் விடுதலை அடைந்திடவும்
ஆண்டவர் அரசில் துயரில்லை - என
வான் அதிர பறை சாற்றிடவும் - என்னை

**2**
குருடரும் ஒளியுடன் நடந்திடவும்
குவலயம் நீதியில் நிலைந்திடவும்
அருள் நிறை காலம் அவனியிலே
வருவதை வாழ்வினில் காட்டிடவும் - என்னை

**3**
தந்தையின் அரசை நிலைநாட்ட
வந்த் நம் தலைவன் யேசுவைப் போல்
சென்றிடும் இடங்களில் தீமையினை
வென்றிடவும் நலன் தந்திடம். - என்னை